[27th July 1964

கனம் திரு. வெ. ராமைய்யா : இதையெல்லாம் கார்ப்பொரேஷன் மற்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்து ஆலோசித்து, போக்கு வரத்தின் நன்மைக்காக, முக்கியமான ரஸ்தாக்களை ஹைவேஸ் இலாகா எடுத்து நடத்துகிறது. அப்படி எடுத்து நடத்துவதனுல் கார்ப்பொரேஷனுக்குப் பளு குறைகிறது. மற்ற ரோடுகளை நல்ல முறையில் கவனித்துப் போக்குவரத்துக்குத் தகுந்தவாறு வேலை செய்ய முடியும். இவற்றைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை இப்பொழுது இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பல டிரெயினேஜ் சாக்கடைகள் எல்லாம் கூட நின்று விடுகின்றன. குடி தண்ணீர்த் தகராறும் ஏற்படுகிறது. வெவ்வேறு இலாகாக்களில் இருப்பதனுல் பொது மக்கள் பாதிக்கப்படுகிற காரணத்தால், அருள் கூர்ந்து, இதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

MR. SPEAKER : Again the hon. Member has put the same question.

ஆடுதுறை—பொறையார் சாலை

*657 கேள்வி.—திரு. ப. ஜெயராஜ் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாயவரம் தாலூகாவில் ஓடும் வீரசோழன் ஆற்றின் தென் கரையில் ஆடுதுறையிலிருந்து மங்கைநல்லூர் வழியாகப் பொறையார் செல்லும் சாலையை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொண்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அச் சாலைக்குக் கப்பி போடும் உத்தேச முண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Cement

*665 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon the Minister for Works be pleased to state the details of the conclusions reached at the conference of the Collectors held in Madras, during the third week of December 1963 regarding proper distribution of Cement and for checking black-marketing in these commodities?

THE HON. SRI V. RAMAIAH : At the Conference of the Collectors held at Madras during December 1963 regarding distribution of cement, the following conclusions were arrived at, viz.,—

(i) The Collectors should not be asked to meet a portion of the demand of less than a wagon load of the wagon load consumers but the demand should be met by the Director of Industries and Commerce himself;